(4) அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்காய்வுக் குழுவின் 1969-70-ம் ஆண்டுக்கான சாட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளுக்'ம் மேற்பட்ட தொகை குறித்த அறிக்கை.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : தலைவர் அவர்களே, பொதுக் கணக்காய்வுக் குழுவின் 1969-70-ம் ஆண்டுக்கான சாட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேற்பட்ட தொகை குறித்த மேற்படி குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1973-ம் ஆண்டு, நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, 1973-ம் ஆண்டு, நிலவுடைமைகள் (நிறைவேற்று நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) 1973-ம் ஆண்டு, சிவில் வழக்குகள் நடைமுறை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That leave be granted to introduce the Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1973".

1973 ஆகஸ்ட் 10]

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த இரண்டு மசோதாக்களை இங்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த மசோதாக்களின் காப்பி எங்களுக்குக் கிடைக்கவில்லை. சமீபத்தில் விதிகளைத் திருத்துகின்றபோது அறிமுகம் செய்யப்படும்போதே எங்களுக்கு காப்பி கொடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது எப்போது அமுலுக்கு வர இருக்கிறது?

Two Bills have been introduced now, but in the Rules Committee it has been decided that whenever Bills are introduced, copies of the Bills would be circulated. Even to oppose the Bills, it will be helpful to us if we are supplied with copies of the Bills We would like to know whether copies of the Bills would be supplied to us and in future whenever Bills are introduced copies would be circulated to us even at the time of introduction itself.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் திருத்தம் இன்னும் இந்த அவையின் ஒப்புதலுக்கு வைக்கப்படவில்லை. அதன் பிறகுதான் அமுலுக்கு வரும்.

(6) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம்	2 மணி 10 நிமிடம்
காங்கிரஸ் (அமைப்பு)	37 நிமிடம்
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	30 நிமிடம்
ஃபார்வார்டு பிளாக்	20 நிமிடம்
முஸ்லீம் லீக்	35 நிமிடம்

காங்கிரஸ் கட்சி ஏற்கனவே அதிகமான நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறது.